''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஔ). <u>வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு வன (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1983-84 மற்றும் 1984-85 (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளின் மிகைச்செலவிற் கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப் பெற்றுள்ளன :

"In pursuance of Clause 1 of Article 205 read with Clause 3 of Article 203 of the constitution of India, I Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1983-84 in excess of the amount authorised or granted for those services and purposes and for that matter."

"In pursuance of Clause of Article 205" read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legielative Assembly to make grants for the demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1984-85 in excess of the amount authorised or granted for those services and purposes and for that matter."

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983-84— வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84 ஆம் ஆண்டிற் கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,